# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044- 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

******

**முறையீட்டு மனு எண். 959/நகராட்சி/2016**

**நாள் : 16/04/2019**

**திரு ம. முத்துக்குமார்,**
**பொள்ளாச்சி.** – **முறையீட்டு மனுதாரர்**

**திரு கனகராஜ்,**
**நகராட்சிகளின் நிர்வாக மண்டல பொறியாளர்,**
**மதுரை மற்றும்** – **எதிர் மனுதாரர்கள்**
**பழநி நகராட்சி அலுவலர்கள்.**

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி, இராஜாமில் சாலை, எண்.186, என்ற முகவரியில் வசிக்கும் திரு ம. முத்துக்குமார் அவர்களின் 12.09.2016 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 959/2016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனு சம்பந்தமாக மனுதாரர் மற்றும் நகராட்சி அலுவலர்களான எதிர்மனுதாரர்கள் விசாரணையின் போது அளித்த வாக்குமூலங்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி, இராஜாமில் சாலை, எண்.186, என்ற முகவரியில வசிக்கும் திரு ம. முத்துக்குமார் என்பவர், தனது முறையீட்டு மனுவில் பழநி நகராட்சியின் பொதுநிதியிலிருந்து ரூ.1.51 கோடி மதிப்பீட்டில் தார்சாலை மற்றும் சிமெண்ட் கான்கிரீட் சாலை சீர்மைப்பதற்கான ஒப்பந்தப் பணிகள், ஒப்பந்தப்புள்ளி சட்டம் மற்றும் விதிகளை மீறி, திருவாளர்கள் சரவணா கன்ஸ்ட்ரக்ஸன் என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளதென முறையீட்டு, மேற்குறிப்பிட்ட நிறுவன உரிமையாளரின் புகாரினை ஏற்று, தன்னிடம் எந்த விசாரணையும் மேற்கொள்ளாமல் கணக்காளராகப் பணியாற்றிய தன்னை பழநி நகராட்சியிலிருந்து மேட்டூர் நகராட்சிக்கு பணியிடமாறுதல் செய்த நகராட்சி நிர்வாக ஆணையரின் ஆணையினை இரத்து செய்து மீண்டும் பழநி நகராட்சிக்கு பணியிட மாறுதல் செய்ய பரிந்துரை செய்யவும், மேற்குறிப்பிட்ட ஒப்பந்ததாரருக்கு உறுதுணையாக செயல்பட்டு நகராட்சி நிதியை கையாடல் செய்வதற்கு துணை புரிந்த நகராட்சி நிர்வாக மதுரை மண்டல முன்னாள் பொறியாளர் திரு. கனகராஜ் மற்றும் நகராட்சிப் பொறியாளர் மற்றும் அலுவலர்கள் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள அரசுக்குப் பரிந்துரை செய்யவும், திருவாளர்கள் சரவணா கன்ஸ்ட்ரக்ஸன்ஸ் உரிமையாளரும் மற்றும் அந்நிறுவன ஊழியரும் எந்தவித அடிப்படை ஆதாரம் இல்லாமல் தன் மீது லஞ்சப்புகாரினைத் தெரிவித்து மிரட்டிய செயலுக்கு அவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ள அரசுக்கு பரிந்துரை செய்யவும், அந்நிறுவனத்தினரை கருப்புப் பட்டியலில் சேர்த்து தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை செய்வதற்கு அரசுக்கு பரிந்துரை செய்யவும் வேண்டி முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரிடம் 09.11.2016 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. பழநி நகராட்சியில் ரூ. 1.51 கோடி மதிப்பீட்டில் சாலைப் பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தப்பணி வழங்கப்பட்ட விவரங்களை விசாரணையின் போது தெரிவித்தார். மேலும், ஒப்பந்த பணி மதிப்பீட்டில் சேமிப்புக்குள்ளான தொகையை வேறு பணிகள் மேற்கொள்வதற்கு உரிய சட்டவிதிகளுக்குட்பட்டு முறையான நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை என்றும், எனவே, சேமிப்புத் தொகை ரூ. 43 லட்சத்தை அவ்வொப்பந்த நிறுவனத்திற்கு வழங்கக்கூடாது என்றும், அந்நிறுவனத்தின் ஒப்பந்த உரிமத்தை இரத்து செய்வதுடன் நகராட்சி மண்டலப் பொறியாளர் மற்றும் நகராட்சி அலுவலர்கள் மீது துறைரீதியான நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் விசாரணையின் போது கேட்டுக்கொண்டார்.

3. முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகள் மற்றும் விசாரணையின் போது மனுதாரர் அளித்த வாக்குமூலம் ஆகியன பரிசீலிக்கப்பட்டன. முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ள ஒப்பந்தப் பணி முறைகேடுகள் குறித்த கோப்பினை முழுமையான ஆய்வுக்கு உட்படுத்தி விசாரணை மேற்கொள்ள விசாரணை அலுவலர் ஒருவரை நியமனம் செய்ய 29.04.2016 நாளிட்ட பழநி நகராட்சி ஆணையரின் கடிதம் எண்.5046/2015/இ1–இல் நகராட்சி நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். மேலும், 24.12.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ ஆணை எண்.583/2016–இல், முறையற்ற வகையில் சாலைப் பணிகள் மேற்கொண்ட நிகழ்வுக்கு பொறுப்பான நகராட்சி அலுவலர்களிடம் விளக்கம் பெற்று மேல்நடவடிக்கை தொடரவும் நகராட்சி நிர்வாக ஆணையருக்கு பரிந்துரைத்து ஆணையிடப்பட்டுள்ளது. ஒப்பந்தப் பணி முறைகேடுகள், நகராட்சி நிர்வாக ஆணையரின் நடவடிக்கைக்கு ஏற்கனவே உட்படுத்தப்பட்டு விட்ட நிலையில் மீண்டும் இது குறித்து ஆய்வு செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை. மேலும், துறைத் தலைவரின் நிர்வாக நடைமுறை குறித்த நேர்வுகளில், இம்முறைமன்ற நடுவத்தின் தலையீடு அவசியம் இல்லாத நிலையில், மனுதாரரின் கோரிக்கையினை பரிசீலிக்கும் நிலை எழவில்லை எனத் தெரிவித்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019– ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், 16–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

16.4.19

16/4/19

பெறுநர்

1. திரு ம. முத்துக்குமார்,
   186, ராஜாமில் ரோடு,
   பொள்ளாச்சி,
   கோவை மாவட்டம்.

2. நகராட்சி ஆணையர்,
   பழநி நகராட்சி,
   பழநி.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி